சுருக்கம்

தொழிலாளர் நலம் - நல வாரியங்கள் - அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் தொழிலாளர் பதிவு செய்தல், பதிவினை சரிபார்த்தல் மற்றும் நல உதவித் தொகைகள் ஒப்பளித்து வழங்குதல் ஆகிய பணிகளை வருவாய்த் துறை அலுவலர்கள் மூலமாக செயல்படுத்துதல் - ஆணைகள் - வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை

அரசாணை (நிலை) எண்.23 நாள்.04.03.2008.

படிக்கப்பட்டது:-

(1) அரசாணை (நிலை) எண்.198, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள்.4.10.1994.
(2) அரசாணை (நிலை) எண்.236, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள், 30.11.1994.
(3) அரசாணை (நிலை) எண். 35, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை நாள்.17.3.1999.
(4) அரசாணை (நிலை) எண்.73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(5) அரசாணை (நிலை) எண்.74, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(6) அரசாணை (நிலை) எண்.77, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(7) அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(8) அரசாணை (நிலை) எண்.79, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(9) அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(10) அரசாணை (நிலை) எண்.81, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(11) அரசாணை (நிலை) எண்.82, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(12) அரசாணை (நிலை) எண்.83, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.
(13) அரசாணை (நிலை) எண்.84, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ1) துறை, நாள், 1.9.2006.

(14) அரசாணை (நிலை) எண்.85, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 1.9.2006.
(15) அரசாணை (நிலை) எண்.86, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 1.9.2006.
(16) அரசாணை (நிலை) எண்.87, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 1.9.2006.
(17) அரசாணை (நிலை) எண்.88, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 1.9.2006.
(18) அரசாணை (நிலை) எண்.12, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 22.1.2007.
(19) அரசாணை (நிலை) எண்.49, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 16.3.2007.
(20) அரசாணை (நிலை) எண்.199, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 8.10.2007.
(21) அரசாணை (நிலை) எண்.200, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1) துறை, நாள், 8.10.2007.

---------

## ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களுக்காக 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைமுறைபடுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டத்தின் அட்டவணையில் 68 உடலுழைப்புத் தொழில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அமைப்புசாரா உடலுழைப்புத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக மேலே 1, 3 முதல் 5, மற்றும் 18-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் கீழ்க்கண்ட நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன:-

(1) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம்.
(2) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்.
(3) தமிழ்நாடு ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம்.
(4) தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்.
(5) தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்.
(6) தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்.
(7) தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம்.
(8) தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம்.
(9) தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெசவுத் தொழிலாளர் நல வாரியம்.
(10) தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்.
(11) தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்.
(12) தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்.
(13) தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்.

(14) தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்.

2. மேலே-2, 6 முதல் 17, மற்றும் 19-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் மேற்கூறப்பட்டுள்ள நல வாரியங்கள் மூலமாக செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட வாரியங்கள் செயல்படுத்தும் திட்டங்களின் கீழ் அவ்வாரியங்களில் பதிவு பெற்றுள்ள தகுதியான அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு கீழ்காணும் நல உதவிகள் வழங்கப்படுகின்றன:-

(1) விபத்து உதவித் திட்டம் (விபத்து இறப்பு மற்றும் விபத்து ஊனம்).
(2) இயற்கை மரண உதவி.
(3) ஈமச்சடங்கு உதவி.
(4) கல்வி உதவித் தொகை
(5) திருமண உதவி
(6) மகப்பேறு உதவி
(7) கண்கண்ணாடி வாங்கிட உதவி
(8) ஓய்வூதியம்.

3. மேற்கூறப்பட்டுள்ள நல உதவிகளை தொடர்புடைய வாரியங்கள் மூலமாகப் பெற தொழிலாளர் துறையின் உதவித் தொழிலாளர் ஆய்வாளர்கள் மூலமாக உடலுழைப்புத் தொழிலாளர்கள் பதிவு செய்து வருகின்றனர். மேலே 20 மற்றும் 21-ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் இவ்வாரியங்களால் வழங்கப்படும் நல உதவிகளில் 'ஈமச் சடங்கு உதவி', 'கல்வி உதவி' மற்றும் 'மகப்பேறு உதவி' ஆகிய நல உதவிகள் தொழிலாளர் துறையின் மண்டல மற்றும் மாவட்ட அளவில் உள்ள சார்நிலை அலுவலர்களால் ஒப்பளித்து வழங்கவும், பிற நல உதவிகள் வாரியங்களின் தலைமை அலுவலகங்கள் வாயிலாக வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. ஒரே பயனாளி அரசின் வெவ்வேறு நலத்திட்டங்களின் கீழ் ஒரே மாதிரியான பயன்களை பெறுவதை தவிர்க்கும் பொருட்டு நல வாரியங்களின் நலத் திட்டங்களைப் பெறுவதற்காக விண்ணப்பங்கள் பெறுதல் மற்றும் அவற்றை சரிபார்த்தல் போன்ற பணிகள் அரசின் ஒரு குறிப்பிட்ட அலுவலர் மூலம் நடை பெறுதல் வேண்டுமென்றும், இப்பணிகளை மாவட்ட ஆட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்கலாமென்றும், 2006-ஆம் ஆண்டின் விவசாயத் தொழிலாளர்கள்-விவசாயிகள் சமூகப்பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தின் கீழ் வழங்கும் நலத்திட்டங்களில் செயல்படுத்தும் வழிமுறைகளை அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களுக்கும் செயல் படுத்தலாம் என்றும் மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்நேர்வு அரசால் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்கண்ட நடைமுறை மாற்றங்களை செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணைகள் வழங்கப்படுகின்றன:-

(1) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் உட்பட அனைத்து 14 அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்களும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இயங்கும்.

(2) அமைப்புசாரா உடலுழைப்பு தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்களை அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் தொடர்ந்து கண்காணிக்கும்.

(3) மேற்கூறப்பட்டுள்ள 14 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் தொழிலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் நல உதவிகளை வழங்குதல் ஆகியவை அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நிர்வாகம் (District Administration) மூலமாக நடைமுறை படுத்தப்படும்.

(4) அனைத்து பதிவு விண்ணப்பங்களும் கிராம நிர்வாக அலுவலர்கள் வழியாக பெறப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் கிராம நிர்வாக அலுவலரால் பதிவு செய்யப்படும்.

(5) தமிழ்நாடு 2006-ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டத்தில் கண்டுள்ளவாறு மகப்பேறு உதவிகளை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம சுகாதாரச் செவிலியர் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் தொடர்புடைய ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் ஒப்பளிக்க அதிகாரம் வழங்கப்படுகிறது. அதே போன்று, கல்விக்கான உதவிகளை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவன தலைவர் ஆகியோரின் பரிந்துரையின் பேரில் சம்பந்தப்பட்ட கல்வித்துறையால் அனுமதி அளிக்கப்படும் அதிகாரியால் ஒப்பளிப்பு செய்ய அதிகாரம் வழங்கப்படுகிறது. பிற நல உதவிகளை வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத்திட்டம்) ஒப்பளிப்பு செய்து வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(6) பதிவு செய்யும் பணி மற்றும் நலத்திட்ட உதவிகள் ஒப்பளிப்பு செய்தல் மற்றும் வழங்குதல் ஆகிய பணிகள் நீங்கலாக பிற பணிகளை நலவாரியங்கள் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

(7) பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கு தேவையான நிதியினை மாவட்ட நிர்வாகத்திற்கு சம்பந்தப்பட்ட நல வாரியங்களின் நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டும்.

(8) மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மாவட்டங்களில் சீராக நன்கு நடைபெறுவதைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் மாநில அளவில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் கீழ்காணும் அலுவலர்கள் அடங்கிய ஒருங்கிணைப்பு குழு (Co-ordination committee) அமைக்கப்படுகிறது.

(i) அரசுச் செயலாளர்,

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை.

(ii) அரசுச் செயலாளர்,
வருவாய்த்துறை,

(iii) வருவாய் நிர்வாக ஆணையர்,

(iv) அரசுச் செயலாளர்,
நிதித்துறை அல்லது அவரது பிரதிநிதி.

(v) அரசுச் செயலாளர்,
சட்டத்துறை அல்லது அவரது பிரதிநிதி.

(vi) தொழிலாளர் ஆணையர்
(உறுப்பினர் செயலாளர்)

5. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளின் விழைவாக தொழிலாளர் துறை மற்றும் வாரியங்களின் நிர்வாக அமைப்பில் ஏற்படக் கூடிய மாற்றங்களை செய்திட உரிய நடவடிக்கை எடுத்திடவும், நலத் திட்டங்களின் கீழ் நல உதவிகள் ஒப்பளிப்பு செய்வது மற்றும் விண்ணப்பங்களை சரிபார்ப்பது குறித்து கடைபிடிக்கப் படவேண்டிய நெறிமுறைகளை வெளியிடவும் தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி-4-ல் ஆணையிடப்பட்டுள்ள நடைமுறை மாற்றங்களின் அடிப்படையில், நல வாரியங்களால் செயல்படுத்தப்படும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து ஆலோசனைக் குழுவின் முன்பாக கலந்தாலோசித்து உரிய கருத்துருக்களை அரசுக்கு அனுப்பி வைத்திடுமாறு தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேற்கூறப்பட்டுள்ள புதிய நடைமுறைகள் 1.4.2008 முதல் செயல்படுத்தப்படும்.

8. இவ்வாணை வருவாய்த் துறை மற்றும் நிதித் துறை ஆகியவற்றின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (அ.சா. குறிப்பு எண். 29/எஸ்.எஸ்(ம.கே)/தொ(ம)வே/2008, நிதித் துறை, நாள்.1.2.2008)

(ஆளுநரின் ஆணைப்படி)

ரமேஷ் குமார் கன்னா,

அரசுச் செயலாளர்.

பெறுநர்
தொழிலாளர் ஆணையர், சென்னை 600 006.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய்நிர்வாக ஆணையர், சென்னை 600 005.
அரசுச் செயலாளர், வருவாய்த் துறை, சென்னை 600 009.
அரசுச் செயலாளர், நிதித் துறை, சென்னை 600 009.
அரசுச் செயலாளர், சட்டத் துறை, சென்னை 600 009.

ஆணையர், நில சீர்திருத்தத் துறை, சென்னை 600 009.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 034.
செயலாளர், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்,
சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர் நல வாரியம், சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் நல வாரியம்,
சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம்,
சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம்,
சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறிப்பட்டு நெசவுத் தொழிலாளர் நல வாரியம்,சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு காலணி, தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு ஓவியர் நல வாரியம்,
சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம்,
சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம், சென்னை 600 102.
செயலாளர், தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நல வாரியம்,
சென்னை 600 102.
தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர், சென்னை 600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்.
மாநில கணக்காயர், சென்னை 600 018.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை 600 018.
மாநில கணக்காயர் (உ.த.பி), சென்னை 600 009.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்.
அனைத்து கருவூல அலுவலர்கள்.
தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை 600 018.
நகல்:-
அரசு செயலாளரின் நேர்முக செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை 600 009.
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை 600 009.

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதி அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை 600 009,
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.